**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2024**

------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துக்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள நாணாவித கடன்பட்டோர்களின் மீதி ரூபா. 11,511,674 ஆகும். இருப்பினும், SLPSAS 10 இன் 21 ஆம் பந்தியின் இன் பிரகாரம் எந்த மதிப்பிழப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதுமான துணை ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் இல்லாததன் காரணமாக, மேற்குறிப்பட்ட நிலுவைகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. மீள அறவீடுசெய்தலில் எவ்வித செயல் முன்னேற்றமும் இல்லாமல் மீதிகள் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தும் நிலுவையில் உள்ளன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா. 26,272,214 தொகையான முதலீட்டு வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக நிதியக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | SLPSAS 10 இன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட நிதியங்களுக்கு மாற்றம் செய்வதற்கு முன்னர் நிதி செயலாற்றல் கூற்றில் முதலீட்டு வருமானத்தை முறையாக அங்கீகரிப்பதற்கான சரிசெய்யும் | -மேற்குறிப்பிட்ட படி- |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை தற்போதைய நிதியாண்டில் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் வங்கி இணக்க கூற்றுக்களில் 14 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படும் நேரடி பற்றுக்கள் மற்றும் வைப்புத்தொகைகளின் கூட்டு மொத்தம் முறையே ரூபா.3,925,059 மற்றும் ரூபா.1,604,146 என்பன அடையாளம் காணப்படாத பற்றுக்களாகவும் மற்றும் அடையாளம் காணப்படாத வைப்புக்களாகவும் காட்டப்பட்டுள்ளன. | 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான ஆவணங்களை பேரவையினால் கண்டுபிடிக்க முடியாதுள்ளது மற்றும் அந்தக் காலத்திலிருந்து ஏதேனும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம் தேவையான பதிவழிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பதிவழிப்பு செய்வதற்கு முன்னர், அந்தந்த பற்றுகள் மற்றும் வைப்புத் தொகைகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின்போது மூலதன குறைவேலைகள் ரூபா. 181,407,693 தொகையாக அதிகரித்துள்ளது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா. 537,256,699 தொகையான உட்பாய்ச்சலொன்று மூலதன குறைவேலையாக காட்டப்பட்டுள்ளது. | இது அடுத்ததாக வரவிருக்கும் நிதிக்கூற்றுக்களில் சீர் செய்யப்படும். | கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 15 இடங்களிலுள்ள 241.2 ஹெக்டேயர் மொத்த காணியானது நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையினை சட்டரீதியாக பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உரிமை மாற்றும் செயன்முறை நிறைவடைந்தவுடன் கணக்கீட்டு நியமங்களுடன் முற்றாக இணங்கும் வகையில் உடனடியாகவும் தீவிரமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அவற்றின் மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்.** | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா.16,264,477 பெறுமதியான பிடிகாசு தொகைகள் மற்றும் ரூபா.850,000 பெறுமதியான பாதுகாப்பு வைப்பு தொகைகள் என்பன மூன்று முதல் எட்டு ஆண்டுகள் வரை தீர்ப்பனவு செய்யப்படாமலும் வருமானமாகக் அங்கீகரிக்கப்படாமலும் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. | உரிய நடைமுறைக்கு ஏற்ப பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, குறை நிரப்பு வேலைகள் உள்ளடங்கலாக புதிய அரங்கம் நிர்மாணிப்பதற்கும், பழைய அரங்கின் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்கும் பல்கலைக்கழகம் ரூபா.48,598,255 இனை (VAT உள்ளடங்கலாக) செலவு செய்துள்ளது. | அந்த ஆண்டில் கிழக்கு பல்கலைக்கழகம் (EUSL) நடத்திய இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழாவை (SLUG) முன்னிட்டு, ஏற்கனவே இருந்த அரங்கு புதுப்பிக்கப்பட்டது. இல்லையெனில், தற்காலிக மேடைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளை அமைப்பதற்கு பல்கலைக்கழகம் அதிக பணத்தினை செலவு செய்திருக்க வேண்டியிருக்கும். | தேசிய பாதீட்டு சுற்றறிக்கையினை முற்றாக பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை** | | | |
| (i) | III ஆம் அத்தியாயத்தின் 20.8 ஆம் உபபிரிவு மற்றும் VI ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் உபபிரிவு | 2020 ஆகஸ்ட் 29 இல் தாவரவியல் துறையின் தரம் I சிரேஷ்ட விரிவுரையாளரின் பதவி விலகலை பேரவை ஏற்றுக்கொண்டிருந்தது. விரிவுரையாளர் 2020 செப்தெம்பர் 03 முதல் | சட்ட விவகாரங்களுக்கான குழு அவரது கோரிக்கையை பரிந்துரைக்கவில்லை, மற்றும் அதன் பரிந்துரை பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமுலுக்கு வரும் வகையில் முந்தைய பதவிக்கு மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டார். எனினும், ரூபா 91,310. ஆரம்ப சம்பளத்தில் வைப்பதற்கு பதிலாக தாபன விதிக்கோவையின் ஏற்பாட்டிற்கு முரணாக சம்பள படிநிலை ரூபா 119,520 ஆக வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2020 செப்தெம்பர் 03 முதல் 2024 பெப்ரவரி 31 வரையிலான காலப்பகுதியில் மேற்படி விரிவுரையாளருக்கு ரூபா 3,633,900 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது. | பேரவையின் இறுதி தீர்மானம் இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றது. | வேண்டும். |
| (ii) | அத்தியாயம் XX இன் 3.1 ஆம் உபபிரிவு மற்றும் UGC யின் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | கல்விசார் ஊழியர்களின் வருகையினை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் ரூபா. 1,435,494,950 மொத்த தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பாரம்பரியமாக, ஏனைய அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நடைமுறையில் இருப்பது போன்று கல்வி சார் ஊழியர்கள் தங்களது வருகையினை விரல் அடையாளப் பதிவு இயந்திரத்தில் பதிவு செய்வதில்லை. | -மேற்குறிப்பிட்ட படி- |
| (இ) | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு** | | | |
| (i) | 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய கடிதம் | மூன்று வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படக்கூடியதாக இருந்த ரூபா 2,305,000 தொகையான மஹாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கூறின் மீள்நிரப்பலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உதவித் தொகை நிதியை மீள்நிரப்பு செய்வது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடன் பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக தொடர்பாடல் செய்வதுடன் தீவிரமான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. | -மேற்குறிப்பிட்ட படி- |
| (ii) | 10/2017 ஆம் இலக்க UGC சுற்றறிக்கை மற்றும் EUSL/E/C/2007/06 ஆம் இலக்க EUSL இன் உள்ளக சுற்றறிக்கை | விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் கல்வி சாராத மற்றும் கல்வி சாரா உதவிது ஊழியர்களால் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. 2024 சனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரை (வேலை நிறுத்தக் காலப்பகுதி நீங்கலாக), 58 பணியாளர்கள் தங்களுக்கான 45 நாள் | UGC இன் 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் EUSL/E/C/2007/06 ஆம் இலக்க EUSL இன் உள்ளக சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், அனைத்து ஊழியர்களும் தமது வருகையைப் பதிவு செய்வதற்கு விரல் | வருகையினை பதிவு செய்வதற்காக விரல் அடையாளப் பதிவு இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| விடுமுறை வரம்பை மீறி அதிகபட்சம் 106 நாட்கள் வரை விடுமுறையினை எடுத்துள்ளனர் என்று கணக்காய்வு குறிப்பிட்டுள்ளது. விடுமுறை கட்டுப்பாடுகள் பலவீனமாக இருந்ததன் காரணமாக அந்தக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபா.99,181,457 சம்பளத் தொகையின் துல்லியத்தைக் கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியவில்லை மற்றும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதிவரையிலும் சம்பளமின்றி எடுத்த விடுமுறைகளுக்கான எவ்வித கழிப்பனவுகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அடையாளப் பதிவு இயந்திரத்தினை பயன்படுத்ததல் வேண்டும். திருகோணமலை வளாகத்தில், தொழில்நுட்ப சிக்கல்கள், மின் தடைகள் மற்றும் மனித வழுக்கள் காரணமாக பயன்படாது சீரற்றதாக காணப்படுகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 136,416,567 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 379,540,072 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா. 515,956,639 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மானியத்தில் ஏற்பட்ட ரூபா. 318,800,000 தொகையான அதிகரிப்பே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | AHEAD செயற்திட்டத்தின் கீழ் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒன்பது நபர்களுக்கு ரூபா. 81,977,656 தொகையான மானியங்கள் வழங்கப்பட்டன மற்றும் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முனைவர் பட்டப் படிப்புகளை நிறைவு செய்திருக்கவில்லை. இந்த ஒன்பது நபர்களில் ஐந்து நபர்கள் பல்கலைக்கழகப் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டனர், முனைவர் பட்டப் படிப்பை நிறைவு செய்யாததன் காரணமாக ரூபா. 45,977,656 தொகையான மானியங்கள் விளைவற்றதாகியிருந்தன. | அனைத்து பிணைத் தொகையினையும் மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முற்றாக பின்பற்றி, மானியத்தினை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டினை (ELTA) வளப்படுத்துதல் மற்றும் ஆங்கில மொழித் திறன் மேம்பாட்டு அபிவிருத்தி செயற்திட்டங்களின் (ELSE DPs) இன் கீழான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான | 2022 ஒக்தோபர் 13 அன்று இடம்பெற்ற கூட்டத்தில் திணைக்கள பெறுகை குழுவின் (DPC) | செயற்திட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முற்றாக பின்பற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டுதல்களின் பிரகாரம், ஆங்கில மொழி கூறுகளை குறைந்தபட்சம் ஒரு நடவடிக்கையாவது குறிப்பான இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். இருப்பினும், 2022 ஆம் ஆண்டில், திருகோணமலை வளாகம் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் எந்தவொரு ஆங்கில மொழி நடவடிக்கையினையும் செயல்படுத்தாமல் திரையரங்கொன்றின் நிர்மாணத்திற்காக ரூபா. 18,568,775 தொகையினை செலவு செய்துள்ளது.<br>இதன் விளைவாக, ஆங்கில மொழித் திறன்களை மேம்படுத்துவதற்கான முக்கிய நோக்கத்தினை அடைந்துகொள்ளவில்லை. | அங்கீகாரத்தின் பிரகாரம் நிதிக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் திரையரங்கிற்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கட்டளையினை திருகோணமலை வளாகம் வழங்கியுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | திருகோணமலை வளாகம் 2024 ஏப்ரல் 12 முதல் 2024 யூன் 18 வரை நாடு முழுவதுமான கல்விசாரா வேலைநிறுத்தமொன்றை சந்தித்தது. இருப்பினும், வேலைநிறுத்தக் காலத்தில் ஊழியர்களை ஈடுபடுத்தியதற்காக மனிதவள ஒப்பந்ததாரருக்கு வளாகத்தினை சுத்தம் செய்தல், துப்பரவு செய்தல் அல்லது தோட்ட பராமரிப்பு நடவடிக்கைகள் என்பன இடம்பெறாத நாட்களுக்கு எவ்வித கழிப்பனவுகளையும் மேற்கொள்ளாமல் ரூபா. 5,296,708 மொத்த தொகையொன்று செலுத்தப்பட்டது. | 2024 மே 02 முதல் 2024 யூலை 15 வரை இடம்பெற்ற கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையின் போது, விரிவுரைகள், நடைமுறைப் பயிற்சிகள் மற்றும் பரீட்சைகள் முதலிய கல்விச் செயல்பாடுகள் தற்காலிக, உதவி மற்றும் புறத்திறனீட்ட ஒப்பந்தப் பணியாளர்களின் உதவியுடன் தொடர்ந்தன. | ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முற்றாக பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பெறவேண்டிய தொகையான ரூபா.437,077,616 இல், ரூபா.238,964,922 (52 சதவீதம்) தொகை கடந்த 3 முதல் 40 ஆண்டுகள் வரை அறவீடுசெய்யப்படாமல் காணப்பட்டது. இந்த தொகையில், ரூபா.147,164,353 பெறுமதியான மொத்த பிணைத் தொகை, 10 முதல் 40 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக பிணை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறிய 66 விரிவுரையாளர்களிடமிருந்தும் மீளஅறவிடப்படாமல் காணப்பட்டது. | பிணை கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கும் அவர்களது உத்தரவாதத்தார்களுக்கும் அவ்வப்போது இயன்றவரைக்கும் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன மற்றும் பிணைக் கடனை மீள செலுத்தாதவர்களிடமிருந்து சுமார் ரூபா.37 மில்லியன் தொகை இதுவரைக்கும் பெறப்பட்டுள்ளது. | பிணையினை மீறுபவர்களிடமிருந்து பிணை பெறுமதியினை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |